## சாதாரண கூட்டம்

வெள்ளகோவில் நகராட்சியின் சாதாரண கூட்டம் 2025-ம் ஆண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் அக்டோபர் மாதம் **24.10.2025-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு** நகர்மன்றக் கூட்ட அறையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**தீர்மானம் எண். 724 / 2025**

ஆணையர் அவர்களின் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2025-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 2589 / 2023 / சி1)**

**தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.**

**தீர்மானம் எண். 725 / 2025**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2025-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 2589 / 2023 / சி1)**

**தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.**

**தீர்மானம் எண். 726 / 2025**

திருமதி.இன்பவள்ளி கபெ சசிக்குமார் என்பவர் இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண்.9 க்குரிய ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் 15.07.2010 அன்று கலந்து கொண்டு, அதற்கான வைப்புத் தொகை ரூ.25,000/- மற்றும் சொத்து மதிப்பு சான்றிதழ் இல்லாத காரணத்தினால் கூடுதலாக ரூ.50,000/- ஆக மொத்தம் ரூ.75,000/- ஐ செலுத்தியதாகவும், நகராட்சியில் ஏலம் எடுத்து கால தாமதமாக கடை ஒப்படைக்கப்பட்டதால், கடை எடுத்து நடத்தவில்லை எனவும் குறிப்பிட்டு, மேற்படி செலுத்திய தொகை ரூ.75,000/- தனக்கு வழங்குமாறு கோரியுள்ளார்.

மேற்படி தொகையானது வைப்புத்தொகை பதிவேட்டில் வரவு வைக்கப்பட்டு காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேடு 2025-2026 பக்கம் எண்.82-ல் இருப்பு உள்ளது.

மேலும், உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளில் திருமதி.இன்பவள்ளி என்பவரின் பெயரில் குத்தகை இனங்கள் தொடர்பாக தணிக்கைத் தடை ஏதும் நிலுவை இல்லை. எனவே, மேற்படி மனுதாரருக்கு ரூ.75,000/- வைப்புத் தொகையினை திரும்ப வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2178/2025/அ3)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 727 / 2025**

வெள்ளகோவில் நகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், பேருந்து நிலைய காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோருக்கு தீபாவளிப்பண்டிகை முன்னிட்டு 2025-2026-ம் ஆண்டிற்கு அரசு நிறுவனமான கோ-ஆப் டெக்ஸ், திருப்பூரில் சீருடை துணிகள் வாங்கி

வழங்கவும், காலணிகள் மற்றும் தையல் கூலிக்கு அரசு நிர்ணயித்துள்ள தொகையை வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(**கோப்பு எண்.1986 /2025/எச்1**)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

<u>**தீர்மானம் எண்.728 / 2025**</u>

தமிழ்நாடு சாலையோரவியாபாரிகள் வாழ்வாதாரம் பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குபடுத்துதல் திட்டம் மற்றும்விதிகள் 2015-ன்படி வெள்ளகோவில் நகராட்சி பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகள் விற்பனைசெய்வதற்கு வியாபார பகுதிகள், வரையறுக்கப்பட்ட வியாபார பகுதிகள் மற்றும் விற்பனை தடைசெய்யப்பட்ட பகுதிகள் என மூன்று விற்பனை மண்டலங்களாக பிரிக்கப்பட்டு கீழ்குறிப்பிட்டவாறுவிற்பனை கட்டணம் மற்றும் பராமரிப்பு கட்டணம் ஆகியவை குறைந்தபட்சத் தொகையாக நிர்ணயம்செய்து 25.08.2025-ம் தேதி அன்று நடைபெற்ற நகர விற்பனைகுழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.எனவே கீழ்குறிப்பிட்டுள்ள பொருள் எண். 1 முதல் 4 வரை குறைந்தபட்ச விற்பனை கட்டணம் மற்றும்பராமரிப்பு கட்டணத்தை சாலையோர வியாபாரிகளிடமிருந்து வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>பொருள் எண்.1</u>

வெள்ளகோவில் நகராட்சி பகுதிகளில் தெருவோரம் வியாபாரம் செய்பவர்களின் பகுதிகளை கீழ் குறிப்பிட்டவாறு வியாபார பகுதி (Vending Zone), வரையறுக்கப்பட்ட வியாபார பகுதி (Restricted Vending Zone) மற்றும் தடைசெய்யப்பட்ட வியாபார பகுதி ஆகியவற்றை நகர வியாபாரக் குழுவில் பதிவு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டது.

<u>**I.வியாபாரபகுதி (Vending Zone)**</u>

| வ.எண் | வியாபார பகுதி (Vending Zone) | வார்டு |
|---|---|---|
| 1 | உப்புப்பாளையம் ரோடு | 1 |
| 2 | துரைராமசாமி நகர் | 4 |
| 3 | இந்திரா நகர் | 5 |
| 4 | சொரியங்கிணத்துப்பாளையம் | 8 |
| 5 | மூலனூர் ரோடு | 9 |
| 6 | வீரக்குமார் நகர் | 11 |
| 7 | காடையூரான் வலசு | 14 |
| 8 | அமராவதி நகர் | 15 |
| 9 | பாரதி நகர் | 16 |
| 10 | எல்.கே.சி. நகர் | 16 |
| 11 | காமராஜபுரம் | 17 |
| 12 | புதுக்காடு | 18 |
| 13 | தீத்தாம்பாளையம் ரோடு | 19 |
| 14 | சிவநாதபுரம் | 19 |

<u>**II.வரையறுக்கப்பட்ட வியாபார பகுதி (Restricted Vending Zone)**</u>

| வ.எண் | வியாபார பகுதி (Vending Zone) | வார்டு |
|---|---|---|
| 1 | GH ரோடு | 10 |
| 2 | சந்தை ரோடு | 16 |

## III.தடைசெய்யப்பட்டவியாபார பகுதி (Non Vending Zone)

அரசு கட்டிடங்களில் வாயிலிருந்து 10 மீட்டர் தூரம், பேருந்து நிலையம் நுழைவு வாயிலிருந்து 50 மீட்டர் தூரம் உள்ள பகுதிகள், கல்வி நிறுவனங்கள் உள்ளகட்டிட நுழைவு பகுதியிலிருந்து 30 மீட்டர் தூரம் உள்ள பகுதிகள்.

| வ.எண் | வியாபார பகுதி (Vending Zone) | வார்டு |
|---|---|---|
| 1 | முத்தூர் ரோடு | 3 |
| 2 | புதிய பேருந்து நிலையம் முன்புறம் | 5 |
| 3 | திருச்சி மெயின் ரோடு | 6 |
| 4 | கரூர் ரோடு | 6 |
| 5 | தாராபுரம் ரோடு | 6 |
| 6 | கோவை மெயின்ரோடு | 10 |
| 7 | GH ரோடு | 10 |
| 8 | பழைய பேருந்து நிலையம் முன்புறம் | 12 |
| 9 | திருப்பூர் ரோடு | 15 |

**பொருள் எண்.2**

வியாபார பகுதி (Vending Zone) வரையறுக்கப்பட்ட வியாபார பகுதி (Restricted Vending Zone) ஆகிய பகுதிகளில் வியாபாரம் செய்பவர்கள் அடையாள அட்டை இல்லாதவர்கள் நகராட்சியில் விண்ணப்பித்து உரிய வியாபாரம் செய்வதற்கு அடையாள அட்டை மற்றும் விற்பனை சான்று பெற்றுக்கொள்ள ஒப்புதல்வழங்கப்பட்டது.

**பொருள் எண்.3**

**கட்டண விபரம் மற்றும் பராமரிப்பு கட்டணம் செலுத்துதல்**

தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் சாலையோர விற்பனையை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ன்படி விற்பனை கட்டணம் – (1) சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் மற்றும் பராமரிப்புகட்டணம் செலுத்த வேண்டும்.(2) உப விதி (1)-ன்படியான விற்பனை கட்டணம் கீழ்காணும் பட்டியலின் படியாகும்.

**வியாபார கட்டணம் விபரம்**

| வ. எண் | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1 | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டு மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.750/- க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டு மதிப்பில் 2 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1500/- க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டு மதிப்பில் 3 சதவீதம் – வருடத்திற்கு ரூ.3000/- க்கு குறையாமல் |
| 2 | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டு மதிப்பில் 0.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.375/-க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டு மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.750/-க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டு மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1500/- க்கு குறையாமல் |

| | | | |
|---|---|---|---|
| 3 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/- |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1500/- |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ.3000/- |
| 4 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.375/- |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/- |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ.1500/- |
| 5 | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | - | வருடத்திற்கு ரூ.250/- |

உரிய விதிகளின்படிமேற்படி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தொகையை வியாபார கட்டணமாகவும் இதில் 25 சதவீதம்பராமரிப்பு கட்டணமாக நகராட்சியில் செலுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

வியாபார பகுதி (Vending Zone) வரையறுக்கப்பட்ட வியாபார பகுதி (Restricted Vending Zone) ஆகிய பகுதிகளில் வியாபாரம் செய்பவர்கள் நகர விற்பனைக்குழுவில் தெரிவிக்கப்பட்ட விதிகளின் படி வியாபாரம் செய்யப்பட வேண்டும். இதனை மீறி வியாபாரம் செய்பவர்கள் அவர்களது அடையாள அட்டைமற்றும் வியாபார சான்று ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டது.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

வெள்ளகோவில் நகராட்சி சாலையோர வியாபாரிகளின்நகர விற்பனைக்குழுவால் 25.08.2025 அன்று ஒப்புதல் வழங்கப்பட்ட குறைந்தபட்ச விற்பனைகட்டணம் மற்றும் இக்கட்டணத்தில் 25 சதவீதம் பராமரிப்பு கட்டணமாக சாலையோர வியாபாரிகளிடமிருந்துவசூல் செய்ய நகர்மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். **790/2014**/எப்1)

**தீர்மானம் – ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 729 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரீ. சர்வே.எண். 549/2A2A-ல் 1.10 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தை குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திரு. K.M. பெரியசாமி மற்றும் திரு.P.கலைச்செல்வன், 14/55, சேரன் நகர், வெள்ளகோவில் அவர்களால் மனைப்பிரிவு அனுமதி கோரியது. திருப்பூர் மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். VI9A94P8/2022/TCP நாள். 27.04.2023-ன் படி உள்ளாட்சிக்கு மனைப்பிரிவு உரிமையாளரால் சாலை மற்றும் பொது இடங்களை நன்கொடை ஆவணம் எண். 1866/2023 & 1867/2023, நாள். 19.04.2023-ல் பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியர் காங்கேயம் அவர்களின் டி.ஆர்.எண். 2023/32/05/ 000779SD, நாள்.04.10.2023–ல் சாலை மற்றும் பொது இடங்களுக்கு தனி உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண். 1517/2023/எப்1, நாள். 20.07.2025-ன் படி மனைப்பிரிவு கட்டணங்கள் ரூ.90020/- ஐ சலான்எண். 159/01/01/23-24/0031154, நாள்.14.02.2024–ல் நகராட்சியில் செலுத்தியுள்ளார். அத்துடன் மனைப்பிரிவு வைப்புத் தொகையாக ரூ. 1,10,000/-ஐ சலான் எண்.159/01/01/23-24/0031155, நாள். 14.02.2024-ல் கட்டியுள்ளார். நிலப் பயன்பாடு மாற்றக்கட்டணம் ரூ.23114/- ஐ பாரத மாநில வங்கியில் கருவூல சலான் எண். 20230823005000, நாள். 23.08.2023 மற்றும் சலான் எண். 20250901019521, நாள். 01.09.2025-ல் ரூ. 2700/-ஐ கட்டியுள்ளார்.

ஈரோடு அரசு பொறியியல் கல்லூரி வாயிலாக மனைப்பிரிவு சாலைகளை ஆய்வு செய்து 28.08.2025-ல் தர சான்று வழங்கியுள்ளார்கள். மேலும் இம்மனைப்பிரிவிற்கு

வடிகால் மற்றும் குடிநீர் வசதிகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் 28.08.2025-ல் சான்று வழங்கியுள்ளார். அத்துடன் தெருவிளக்கு அமைப்பதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.260000/-ஐ சலான் எண். 159/01/03/25-26/0006224, நாள்.25.08.2025-ல் நகராட்சியில் செலுத்தியுள்ளார். எனவே நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களால் SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO: 120/2023-ல் மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப் பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். VI9A94P8 / 2022 / TCP நாள்.27.04.2023-ல் குறிப்பிட்ட சிறப்பு நிபந்தனைகள் மனைப்பிரிவு உரிமையாளரால் நிறைவேற்றப்பட்டுள்ளதால் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1517/2023/எப்1)**

**தீர்மானம் – அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 730 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 எல்.கே.சி நகர் பள்ளி முன்புறம் மழைநீர் வடிகால் அமைத்து குளத்திற்கு மழை தண்ணீர் கொண்டு செல்வது அவசியமாகிறது. மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.4.10 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2207/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 731 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 எல்.கே.சி நகர் குளத்தில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட திட்டத்தில் நடைபாதையின் ஒருபுறம் மட்டும் வேலி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது நடைபாதையின் மறுபுறமும் வேலி அமைக்கும் பட்சத்தில் ஆடு, மாடுகள் உள்நுழையாமல் இருக்கும். எனவே மேற்கண்ட குளத்தின் நடைபாதையில் மறுபுறமும் வேலி அமைக்கவும் தண்ணீர் வரும் பாதையில் சிமெண்ட் குழாய்களுக்கு Screener அமைக்க **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள.1.60 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2206/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 732 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் அதிக அளவில் பழுதடைந்து காணப்படுகிறது. இதில் சில பகுதிகள் வளர்ந்து வரும் பகுதிகளாகவும், சில மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளாவும் உள்ளன. எனவே அப்பகுதியில் உள்ள பழுதடைந்த விளக்குகளை மாற்றவும் மற்றும் மின்சார சேமிப்பை கருத்தில் கொண்டு CFL மற்றும் Sodium விளக்குகளை LED ஆக மாற்றம் செய்ய வேண்டியது அவசியமான பணியாக உள்ளது. எனவே மேற்படி

பணியினை **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.10.30 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2357/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 733 / 2025**

வெள்ளகோவில் நகராட்சிக்குச் சொந்தமான மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் பிளாஸ்டிக் பாட்டில்கள், பாலித்தீன் பைகள் மற்றும் இதர பொருட்கள் அடைப்பு ஏற்பட்டு மழைக்காலங்களில் அடிக்கடி தண்ணீர் தேங்கி சாலையில் கழிவுநீருடன் செல்வதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால் சுமார் 50 இடங்களில் Ms Screener அமைத்து அவ்வப்போது அடைப்பில் உள்ள கழிவுகளை அகற்ற வேண்டியது அவசியமாகிறது. எனவே அமைக்க **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.1.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2363/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 734 / 2025**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18ல் LKA கிழக்கு சாலை மற்றும் அண்ணா நகர் ஆகிய பகுதிகளில் மழைகாலங்களில் சாலையில் மழைநீர் அதிகளவில் தேங்குவதால் அப்பகுதியில் உள்ள பள்ளமான தார்சாலை சீரமைப்பதற்கு அமைக்க வேண்டியுள்ளது. எனவே அமைக்க **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.2.65 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2362/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 735 / 2025**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13ல் டிசி ரோடு நகராட்சி அலுவலகம் முதல் குறுக்குத்தெரு(கி/மே) சாலையான மிக குறுகலாக சேதமான தார்சாலையாக உள்ளது. மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் அச்சாலையை சீரமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட சேதமடைந்த தார்சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது- எனவே அமைக்க **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.4.97 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2360/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 736 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 கரட்டுப்பாளையம் காலணி பகுதியில் புதிதாக Syntex tank உடன் கூடிய Stand பொருத்துவதற்கும், மோட்டார் மற்றும் காலணி விரிவாக்க பகுதிகளுக்கு தேவையான பகிர்மான குழாய்கள் அமைக்கவும் அவசியமானதாக உள்ளது. அப்பகுதி மக்களின் தினசரி உபயோகமான தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு மேற்படி பணிகளை **குடிநீர்நிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.4.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2365/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 737 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4ல் தீத்தாம்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கிழபுறம் உள்ள மோட்டார் அறை பழுதடைந்து காணப்படுகிறது. இதனால் அதனை உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே அதனை சரிசெய்து உபயோகத்திற்கு கொண்டு வர வேண்டியுள்ளது- எனவே மேற்படி பணிகளை **குடிநீர்நிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.1.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2366/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 738 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான உப்புப்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கக்தொட்டி (பழையது), தீத்தாம்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கக்தொட்டி (பழையது) மற்றும் சலவையாளர் காலணி மேல்நிலை நீர்த்தேக்கக்தொட்டி (பழையது) ஆகிய மூன்று தொட்டிகளின் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசியமானதாக உள்ளது. எனவே மேற்படி பணிகளை **குடிநீர்நிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.4.60 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2364/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 739 / 2025</u>**

நகராட்சியில் உள்ள அனைத்து பணிகளும் கணினி மயமாக்கப்பட்டு வருவதாலும், தற்போது அலுவலகத்தில் போதிய கணினிகள் இல்லாத காரணத்தாலும், புதியதாக பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதால் அவர்களுக்கும் கணினிகள் வழங்க வேண்டிய சூழ்நிலையில் அலுவலகப் பணிகளின் அவசர அவசியம் கருதி கீழ்காணும் விபரப்படி அனைத்து பிரிவுகளுக்கும் புதியதாக கணினிகள், பிரிண்டர்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

| வ. எண். | தேவை விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Desktop | 3 |

| வ.எண். | தேவை விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 2 | All in One | 5 |
| 3 | Printer | 2 |
| | Total | 10 |

எனவே மேற்படி பணிகளை **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.11.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2356/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 740 / 2025**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 சலவையாளர் காலனி பகுதியில் உள்ள சமுதாயநலக்கூடம் தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் மேற்கண்ட சமுதாயக்கூடம் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளதால் அதற்கு வர்ணம் பூச அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவ்விடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள சமுதாயக்கூடத்திற்கு பெயிண்டிங் பணி மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள எனவே மேற்படி பணியினை **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.2.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2374/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 741 / 2025**

வெள்ளகோவில் நகராட்சியில் **பொதுநிதி 2025-26ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரை EB Wireகள் பொருத்தி தெருவிளக்குள் அமைத்தல் பணிக்கு ரூ.3.90 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.671/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி சதவீதம்** |
|---|---|---|
| 1 | ஆறுபடையப்பன் அசோசியேட்ஸ் | மதிப்பிட்டை விட 0.04 % குறைவு |
| 2 | திரு.S.சுப்பையா | மதிப்பிட்டை விட 5.26% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஆறுபடையப்பன் அசோசியேட்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1812/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 742 / 2025**

வெள்ளகோவில் நகராட்சியில் **பொதுநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரைமின்கம்பங்களுடன் கூடிய தெருவிளக்குகள் அமைத்தல் பணிக்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.672/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | ஆறுபடையப்பன் அசோசியேட்ஸ் | மதிப்பிட்டை விட 0.03 % குறைவு |
| 2 | திரு.S.சுப்பையா | மதிப்பிட்டை விட 6.51% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஆறுபடையப்பன் அசோசியேட்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1815/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 743 / 2025**

வெள்ளகோவில் நகராட்சியில் **பொதுநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட அம்மன்கோவில் வீதி, தீத்தாம் பாளையம், தண்ணீர்பந்தல் ஆகிய பகுதிகளில் உள்ள கழிப்பிடங்கள் பழுது மற்றும் பராமரிப்புப் பணிக்கு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.673/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.S.சுப்பையா | மதிப்பிட்டை விட 0.04 % குறைவு |
| 2 | திரு.R.வடிவேல் | மதிப்பிட்டை விட 1.44% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.S.சுப்பையா, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1811/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 744 / 2025**

வெள்ளகோவில் நகராட்சியில் **பொதுநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12ல் காந்தி நகர் இரு தெருக்களிலும் சிறுபாலங்கள் அமைத்தல் பணிக்கு ரூ.2.20 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.674/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.S.ராமசாமி | மதிப்பிட்டை விட 0.01% குறைவு |
| 2 | திரு.S.சுப்பையா | மதிப்பிட்டை விட 5.00% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு :**</u>

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.S.ராமசாமி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1810/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

<u>**தீர்மானம் எண். 745 / 2025**</u>

வெள்ளகோவில் நகராட்சியில் **பொதுநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சி புதிய அலுவலகக் கட்டிடத்தில் கட்டிடத்தின் முன்புறம் Ramp, Vehicle shed, நடைபாதையாக Paver block, Grill அமைத்தல் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.678/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | SSR &Co., | மதிப்பிட்டை விட 0.00 % குறைவு |
| 2 | கணேசன் கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட 1.76% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு :**</u>

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள SSR&Co., ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1874/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

<u>**தீர்மானம் எண். 746 / 2025**</u>

வெள்ளகோவில் நகராட்சியில் **பொதுநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சியில் வார்டு எண் 16ல் உள்ள எல்கேசி நகர் குளத்தில் சிறிய பாலம், கருவேல மரங்களை அப்புறப்படுத்துதல், குளத்தின் உட்புறம் உள்ள மண்ணைக் கொண்டு பலப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.684/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.S.சுப்பையா | மதிப்பிட்டை விட - 0.08 % குறைவு |
| 2 | திரு.R.வடிவேல் | மதிப்பிட்டை விட 2.54% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.S.சுப்பையா, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1875/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**தீர்மானம் எண்.747 / 2025**

வெள்ளகோவில் நகராட்சியில் **பொதுநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சியில் வார்டு எண் 16ல் உள்ள எல்கேசி நகர் குளத்தில் மின்கம்பங்களுடன் கூடிய மின்விளக்குகள் அமைத்தல் பணிக்கு ரூ.2.18 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.680/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | ஆறுபடையப்பன் அசோசியேட்ஸ் | மதிப்பிட்டை விட - 0.05% குறைவு |
| 2 | திரு.S.சுப்பையா | மதிப்பிட்டை விட 5.90% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஆறுபடையப்பன் அசோசியேட்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1887/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**தீர்மானம் எண்.748 / 2025**

வெள்ளகோவில் நகராட்சியில் **பொதுநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 புதுக்காடு பகுதியில் உள்ள 3 குறுக்குத்தெருக்களில் சேதமடைந்த சிமெண்ட் சாலைகளை மாற்றியமைத்தல் பணிக்கு ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.686/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | KMR & Co., | மதிப்பிட்டை விட - 0.01% குறைவு |
| 2 | மணிவேல் & கோ | மதிப்பிட்டை விட 2.30% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள KMR&Co., ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண்.1968/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 749 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் **பொதுநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக வளாகத்தினுள் கண்காணிப்பு கேமரா பொருத்துதல் பணிக்கு ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.721/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | Infygru Private Limited | மதிப்பிட்டை விட -29.02 % குறைவு |
| 2 | Sagar Electronics | மதிப்பிட்டை விட 0.38% அதிகம் |
| 3 | Syscon Systems | மதிப்பிட்டை விட 0.70% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள Infygru Private Limited, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண்.1324/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 750 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் **பொதுநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்கு Antivirus Key Renewal செய்தல் பணிக்கு ரூ.0.75 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.684/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | Innometrix Techub Private Limited | மதிப்பிட்டை விட - 34.60 % குறைவு |
| 2 | Sagar Electronics | மதிப்பிட்டை விட -2.13% அதிகம் |
| 3 | Syscon System | மதிப்பிட்டை விட 0.0% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள Innometrix Techub Private Limited, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1915/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 751 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் **குடிநீர் நிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரையிலான பகுதிகளில் காவேரி கூட்டுக்குடிநீர் மற்றும் அமராவதி குடிநீர் விநியோகம் செய்யப்படும் பொழுது குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் பணிக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.669/2025-ன்படி

அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | கங்கணம் கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட - 0.01% குறைவு |
| 2 | சன்மதி கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட 0.21% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கங்கணம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1813/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 752 / 2025**

வெள்ளகோவில் நகராட்சியில் **குடிநீர்நிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 21 வரையிலான பகுதிகளில் காவேரி கூட்டுக்குடிநீர் மற்றும் அமராவதி குடிநீர் விநியோகம் செய்யப்படும் பொழுது குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.670/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | கங்கணம் கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட - 0.02% குறைவு |
| 2 | சன்மதி கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட 0.24% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கங்கணம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1814/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**தீர்மானம் எண். 753 / 2025**

வெள்ளகோவில் நகராட்சியில் **குடிநீர்நிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1,2,3 மற்றும் 14 ஆகிய வார்டுகளில் சில பகுதிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிக்க வழிவகை செய்யப்படாததால் 3" PVC குடிநீர் பகிர்மானக்குழாய்கள் அமைத்தல் பணிக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.676/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | கங்கணம் கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட 0.03 % குறைவு |
| 2 | சன்மதி கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட 0.65 % அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கங்கணம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1808/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 754 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் **குடிநீர்நிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19,20 மற்றும் 21 ஆகிய வார்டுகளில் சில பகுதிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிக்க வழிவகை செய்யப்படாததால் 3" PVC குடிநீர் பகிர்மானக்குழாய்கள் அமைத்தல் பணிக்கு ரூ.4.45 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.675/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | கங்கணம் கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட -0.04 % குறைவு |
| 2 | சன்மதி கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட 0.66% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கங்கணம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1809/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 755 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் **குடிநீர்நிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டுகளில் பழுதடைந்த சின்டெக்ஸ் டேங்க், மற்றும் உதிரிபாகங்கள் மாற்றியமைத்தல் பணிக்கு ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.677/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | கங்கணம் கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட -0.03 % குறைவு |
| 2 | சன்மதி கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட 0.10% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கங்கணம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1807/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 756 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் **குடிநீர்நிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17-ல் காமராஜபுரம் (விநாயகர் கோவில் பின்புறம்) பகுதியில் Syntex tank-க்கு புதியதாக மோட்டார் பொருத்துவதற்கும், மோட்டார் அறை அமைத்தும் EB Service பொருத்துதல் பணிக்கு ரூ.2.30 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.681/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | கங்கணம் கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட -0.02 % குறைவு |
| 2 | சன்மதி கன்ஸ்ட்ரக்சன் | மதிப்பிட்டை விட 0.60% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கங்கணம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1876/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 757 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் **கல்விநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் செம்மாண்டம் பாளையம் ஆரம்பப்பள்ளியின் முன்புறம் பேவர்பிளாக் தளம் அமைத்தல் பணிக்கு ரூ.2.30 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.682/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | ஆறுபடையப்பன் அசோசியேட்ஸ் | மதிப்பிட்டை விட -0.03 % குறைவு |
| 2 | திரு.S.சுப்பையா | மதிப்பிட்டை விட 7.19% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஆறுபடையப்பன் அசோசியேட்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 1903/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 758 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் **கல்விநிதி 2025-26-ன்கீழ்** நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 தீத்தாம்பாளையம் நடுநிலைப்பள்ளியில் Paver Black நடைபாதை அமைத்தல், கழிப்பிடம், குடிநீர் குழாய்கள் பழுது மற்றும் பராமரிப்புப் பணிக்கு ரூ.3.20 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள 08.09.2025 தேதிய நகர்மன்ற தீர்மான எண்.721/2025-ன்படி அனுமதி வழங்கியுள்ளது. எனவே 07.10.2025 நடைபெற்ற டெண்டரில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.S.சுப்பையா | மதிப்பிட்டை விட -0.03% குறைவு |
| 2 | திரு.R.வடிவேல் | மதிப்பிட்டை விட 3.19% அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.S.சுப்பையா, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(கோப்பு எண். 0518/2025/இ1)**

**தீர்மானம் – ஏற்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.759 / 2025</u>**

பொது (முதல்வரின் முகவரி) துறை அரசாணை எண்.390 நாள்.19.06.2025-படி "**உங்களுடன் ஸ்டாலின் திட்டம்**" சிறப்பு முகாம்கள் இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் நடைபெற்றது. மேற்படி முகாம்களில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை "**முதல்வரின் முகவரி**" என்ற இணையத்தில் பதிவு செய்ய 7 கணினிகள் மற்றும் 7 பிரிண்டர்கள் வழங்க வேண்டியிருந்தது. ஏற்கனவே, பயன்படுத்தப்பட்டு வரும் இவ்வலுவலக கணினிகள் மிகவும் பழைய Version-ல் உள்ளதால், பணியின் அவசர அவசியம் கருதி 3 கணினிகள் மற்றும் 2 பிரிண்டர்கள் ஆகியவற்றை ரூ.5,17,914/-க்கு **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7)**ன் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1157/2025/அ3)

**தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.760 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சி அலுவலகத்தில் எலக்ட்ரிக்கல் பணி, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மேல்நிலைத்தொட்டிகளில் குளோரின் சோதனை கருவி கொள்முதல் செய்தல், நகராட்சி அலுவலகத்தில் ஜெனரேட்டர் மற்றும் RO இயந்திரம் பழுது மற்றும் பராமரிப்பு செய்தல், நகராட்சிக்குச் சொந்தமான சொரியங்கிணத்துப்பாளையம் உரக்கிடங்கு மற்றும் மேற்குப்பள்ளி அங்கன்வாடி மையத்தில் HDPE குழாய் மாற்றியமைத்தல் ஆகிய பணிகளின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்ற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998ன் படி துணைவிதி Sec (57) ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. எனவே, பணியின் அவரச அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெற்று அதனை முடிவு செய்து கீழ்க்கண்ட மதிப்பீடுகளுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.) |
|---|---|---|
| 1 | வெள்ளகோவில் நகராட்சி அலுவலக வளாகத்தினுள் சேர்மன் அறை, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவில் சேதமடைந்த மின் ஒயர்கள் மற்றும் மின்விளக்குகள் அமைத்தல் | 55,000/- |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.) |
|---|---|---|
| 2 | வெள்ளகோவில் நகராட்சிக்குப்பட்ட வார்டு எண்.8 சொரியங்கிணத்துப்பாளையம் பகுதியில் உள்ள உரக்கிடங்கு வளாகம் மற்றும் வார்டு எண்.11ல் மேற்குப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி மையம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள Borewell Hose Pipe பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 91,000/- |
| 3 | வெள்ளகோவில் நகராட்சி அலுவலக வளாகத்தினுள் முழு பயன்பாட்டிற்கு 35 KVA Generator மற்றும் RO Plant பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 29,700/- |
| 4 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட 9 மேல்நிலைத்தொட்டிகளை சுத்தம் செய்தல் மற்றும் குடிநீரில் Chlorine Kit 5-Nos கொள்முதல் செய்தல் | 41,000/- |
| | மொத்தம் | 2,16,700/- |

மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டவகைகளுக்கு பட்டியல் தொகை வழங்கியதை அனுமதிக்கும், மன்றத்தின் பார்வைக்கும், வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்..1155/2025/இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்) மு.கனியரசி
நகர்மன்றத்தலைவர்
வெள்ளகோவில் நகராட்சி

/உண்மை நகல்/

29/10/25

ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி

29/10/25

Scanned with OKEN Scanner

## <u>அவசரக் கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2025-ம் ஆண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் அக்டோபர் மாதம் **24.10.2025-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 12.30 மணிக்கு** நகர்மன்றக் கூட்ட அறையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் எண்.</u>** <u>761 / 2025</u>

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்09 செம்மாண்டம் பாளையம் வார்டு எண்.10 ராஜீவ் நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து அப்பகுதி மக்களுக்கு தண்ணீரானது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் பொதுமக்கள் அதிகமான, வளர்ந்து வரும் பகுதியாக இருப்பதால் கூடுதலாக Syntex Tank. Stand, மோட்டார் அறை,ப கிர்மான குழாய்கள், Borewell-ன் உட்புறம் Hose Pipeகள் ஆகியவை புதிதாக மேற்கொள்ள எனவே மேற்படி பணிகளை **குடிநீர்நிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.3.95 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2394/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.</u>** <u>762 / 2025</u>

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான குமாரவலசு சாலையில் வீரக்குமார் கோவில் ஆர்ச் மற்றும் தீயணைப்புத்துறை அலுவலகம் முன்பும் மழையினால் அடிக்கடி மேற்கண்ட இடங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் அடிக்கடி இடையூறாக உள்ளதால் அதனை உடனடியாக சரிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் மேற்கண்ட சாலையில் தேங்கிய இடங்களை சரிசெய்ய தார்ச்சாலை அமைக்கும் பணியினை **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.3.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2391/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.</u>** <u>763 / 2025</u>

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வரை உள்ள வார்டுகளுக்கு காவேரி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் 4MLD குடிநீரும் மற்றும் அமராவதி ஆற்றின் மூலம் 1MLD குடிநீரும் Chlorination செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் Chlorination பம்புகள் மற்றும் உதிரிபாகங்களுக்குரிய ஓராண்டு பழுது மற்றும் பராரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் தினசரி பெறப்படும் குடிநீருக்குரிய Chlorine Liquid கொள்முதல் செய்ய **குடிநீர்நிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.8.20 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2392/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.764 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான உப்புப்பாளையம், எல்.கே.சி நகர், மேற்குப்பள்ளி, DR நகர் 2 பள்ளிகள், சொரியங்கிணத்துப்பாளையம், கிழக்கு பள்ளி ஆகிய நகராட்சி பள்ளிகளில் குடிநீர் சுத்தமான முறையில் வழங்குவதற்கு RO System அமைத்து குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மேற்கண்ட பள்ளிகளில் RO System அமைக்க **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள ரூ.9.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2393/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.765 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரை உள்ள பகுதிகளில் தண்ணீர் விநியோகம் செய்யும்பொழுது ஏர்கம்ப்ரசர், மின்மோட்டார், சம்மெர்சிபெல் மோட்டார்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் நலன்கருதி அதனை உடனுக்குடன் சரிசெய்து, பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு ரூ.4.95 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2395/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.766 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் தண்ணீர் விநியோகம் செய்யும்பொழுது ஏர்கம்ப்ரசர், மின்மோட்டார், சம்மெர்சிபெல் மோட்டார்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் நலன்கருதி அதனை உடனுக்குடன் சரிசெய்து, பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு ரூ.4.98 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.2396/2025/இ1**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண்.767 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரீ.சர்வே.எண்.87/1B -ல் 1.185 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தை குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திருமதி. வளர்மதி மற்றும் திரு. அசோக்குமார், 249, அல்-அமீன் நகர், எல்லப்பாளையம், வில்லரசம்பட்டி, ஈரோடு மாவட்டம்அவர்களால் மனைப்பிரிவு அனுமதி கோரியது. திருப்பூர் மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். WFFDKRJA/2025/TCP, நாள். 04.09.2025-ன்படி உள்ளாட்சிக்கு மனைப்பிரிவு உரிமையாளரால் சாலை மற்றும் பொது இடங்களை நன்கொடை ஆவணம் எண். 2988/2025 நாள். 15.07.2025-ல் பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியர் காங்கேயம் அவர்களின் டி.ஆர்.எண். 2025/32/05/001854SD, நாள்.22.10.2025–ல் சாலை

மற்றும் பொது இடங்களுக்கு தனி உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. இவ்வலுவலக கேட்பு அறிவிப்பு எண். LA/159/2025/003/00005, நாள். 24.10.2025-ன்படி மனைப்பிரிவு கட்டணங்கள் ரூ.2,25,135/-ஐ சலான் எண். 159/CP/25-26/0000894, நாள்.24.10.2025–ல் நகராட்சி கணக்கில் இணையவழியில் செலுத்தப்பட்டுள்ளது. நிலப்பயன்பாடு மாற்றக் கட்டணம் ரூ.39,850/-ஐ பாரத மாநில வங்கியில் கருவூல சலான் எண். 20251022026159, நாள்22.10.2025–ல் கட்டியுள்ளார். ஈரோடு அரசு பொறியியல் கல்லூரி வாயிலாக மனைப்பிரிவு சாலைகளை ஆய்வு செய்து 17.10.2025-ல் தரசான்று வழங்கியுள்ளார்கள். மேலும் இம்மனைப்பிரிவிற்கு வடிகால் மற்றும் குடிநீர் வசதிகள் நல்லமுறையில் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் 22.10.2025-ல் சான்று வழங்கியுள்ளார். அத்துடன் தெருவிளக்கு அமைப்பதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.2,00,000/-ஐ சலான் எண்.159/01/03/25-26/0008706, நாள். 22.10.2025-ல் நகராட்சியில் செலுத்தியுள்ளார். எனவே நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களால் SWP/DTCP/TIRUPPUR/LAYOUT/APPROVALNO: 150/2025-ல் மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். WFFDKRJA/2025/TCPநாள். 04.09.2025-ல் குறிப்பிட்ட சிறப்பு நிபந்தனைகள் மனைப்பிரிவு உரிமையாளரால் நிறைவேற்றப்பட்டுள்ளதால் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம்.

(இணையவழி பதிவு எண். 159/CP/25-26/0000672)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 768 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் உள்ள பொதுப்பிரிவு, சுகாதாரப்பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு அறைகளில் புதிதாக Table மற்றும் வரிவசூல் தொகையை பாதுகாப்பாக வைப்பதற்கு Locker புதியதாக வாங்குவதற்கும் இப்பணியினை **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2589/2025/இ1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**<u>தீர்மானம் எண். 769 / 2025</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் புதிய அலுவலக வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிடத்தில் Optical Fiber Net Working Cable கொள்முதல் செய்து, பொருத்தும் பணியை **பொதுநிதி 2025-26ன்** கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2573/2025/இ1)**

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மானம் எண்.770 / 2025**

வெள்ளகோவில் நகராட்சி புதிய அலுவலக வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிடத்தில் நகர்மன்ற அறைக்கு Speaker, Mic, இதர பணிகள் மேற்கொள்ள அவசியமாவதால் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு பொதுநிதி 2025-26ன்கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2571/2025/இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் எண்.771 / 2025**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான வார்டு எண்.1 வையாபுரி நகர் (Turning of Bala School) வார்டு எண்.2 கல்லாங்காட்டு வலசு (சமுதாயகூடம் அருகில்) வார்டு எண்.4 MGR நகர் (Temple Opposite) மற்றும் அறிவொளி நகர் 3-வது குறுக்கு தெரு ஆகிய 4 பகுதிகளில் இயங்கி வரும் 5HP Compressor ஆனது, அதிக அளவு உபயோகம் மற்றும் அதனை பொருத்தி தோரயமாக 20 வருடம் ஆகிய நிலையில் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் அப்பகுதி மக்களுக்குரிய தினசரி உபயோகமான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. எனவே மேற்படி இடங்களில் உள்ள பழுதடைந்த Compressor-ஐ மாற்றி புதியதாக பொருத்தும் பணிக்கு குடிநீர்நிதி 2025-26ன்கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2572/2025/இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) மு. கனியரசி
நகர்மன்றத்தலைவர்
வெள்ளகோவில் நகராட்சி

/ உண்மை நகல் /

29/10/25

ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி

29/10/25